15.11.2023

அ.வ.எண். 142/2016

ராமகிருஷ்ணன் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. பிரதிவாதிக்கு வயது என்ன இருக்கும் என்றால் தெரியாது. எனது சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 25/7 ஆகும். எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் பழைய கிராமம் மேக்கோடு ஆகும். தற்போது குமரங்குடி கிராமம் ஆகும். பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 25/6 ஆகும். அவரது சொத்து எனது சொத்தின் வடக்கு பக்கம் உள்ளது. பிரதிவாதியின் சொத்தில் ஒரு பெரிய அயனி மரம் இருந்தது என்றாலும் அதை அவர் முறித்து அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்வதற்காக சாலையின் ஓரமாக வைத்திருந்தார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மேற்படி மரம் சம்மந்தமாக என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை நான் புகார் கொடுத்த பின்பு பிரதிவாதியும் எனக்கு எதிராக புகார் ஒன்று கொடுத்தார். பிரதிவாதி என் மீது புகார் கொடுத்த பின்பு மேற்படி அயனி மரத்தை எடுத்துச்சென்று காவல்நிலையத்தில் வைத்தார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அயனி மரம் எனது கண்டத்தில் இருந்ததா என்றால் எனது கண்டத்தில் இருந்த மரத்தை தான் பிரதிவாதி வெட்டினார். சர்வே எண்.25/6-இல் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. ஆணையர் வழக்கு சொத்தை அளக்க வந்தபோது நான் இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை எனது வழக்கறிஞர் இருந்தார். மேற்படி வெட்டப்பட்ட அயனி மரத்தின் அடிப்பக்கத்தை ஆணையர் குறிப்பு எடுத்துக்கொண்டது பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தான 25/7-இன் ஒரு பகுதி தான் வழக்கு பட்டிகை சொத்தின் பி பகுதி என்றால் சரிதான். பிரதிவாதி அவருக்கு உரிமைப்பட்ட சொத்தில் உள்ள அயனி மரத்தை முறித்துகொண்டு போன இடத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு பி பட்டிகை சொத்தாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் கொடுத்த புகாருக்கான ரசீதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். புகார் கொடுத்த தேதி என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு உரிமைப்பட்ட இடத்தில் உள்ள அயனி மரத்தை தான் பிரதிவாதி வெட்டி கொண்டு சென்றார் என்று தான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

3. பிரதிவாதிக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாருக்கான ரசீதை வழக்குரையில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்று கூறமுடியுமா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அந்த ரசீதை பார்த்தால் புகார் என்றைக்கு கொடுக்கப்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான். எனது சொத்திற்கு வடக்கு பக்கம் எல்கை அமைப்பதற்காக நான் முயற்சி செய்தபோது பிரதிவாதி தடுத்தார் என்று கூறியுள்ளேன் அது என்றைய தேதி என்றால் ஞாபகமில்லை. நான் குடியிருக்கும் இடத்தில் செல்வாக்கான மனிதர் என்றால் இல்லை ஒரு சாதாரண மனிதர் தான். பிரதிவாதி அவரது இடத்தில் உள்ள அயனி மரத்தை நான் வெட்டி களவாடி சென்றதால் அவர் என் மீது புகார் கொடுத்தார் என்றாலும் அதை மறைப்பதற்காக தான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை போட்டதால் தான் பிரதிவாதி என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தி வைக்கப்படுகிறது)